# அரசியல்துறை
# தமிழீழ விடுதலைப் புலிகள்

30.12.2023
தமிழீழம்.

**அன்பார்ந்த தமிழ் மக்களே !**

## தமிழின தேசிய தலைவரையும் ஈழத் தமிழர்களையும் ஆழமாக நேசித்த கப்டன் விஜயகாந்த் அவர்களுக்கான இரங்கல் அறிக்கை

தென்னிந்திய பிரபல நடிகரும் சிறந்த அரசியல் தலைவரும், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் (தே.மு.தி.க) தலைவரும், தமிழக சட்டசபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களையும் ஈழத் தமிழர்களையும் இறுதி மூச்சு நிற்கும் வரை ஆழமாக நேசித்து குரல் கொடுத்து வந்த கப்டன் விஜயகாந்த் 28.12.2023 அன்று சென்னையில் சாவடைந்தார் எனும் செய்தி தமிழீழ மக்களை பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. விஜய்காந்த் அவர்களுக்கு சிறுவயதிலேயே தமிழ் மீதிருந்த அதீதபற்றே திரைக் கலைஞரான பின்னும் வளர்ந்து, ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கவும் போராடவும் அவரைத் தூண்டியது.

தமிழீழத்தில் எம்மக்கள் மீது சிங்களவர்கள் புரிந்த கொடூரமான தாக்குதலில் ஏராளமான அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதைக் கண்டு கொதித்தெழுந்த விஜயகாந்த் ஈழத் தமிழர்கள் மீதான படுகொலையை கண்டித்து திரைக்கலைஞர்களை அணிதிரட்டி அடையாள உண்ணாநிலைப் போராட்டத்தை 1986களில் நடாத்தியிருந்தார். அத்தோடு நின்றுவிடாது ஈழத் தமிழர்களுக்கு நீதி வேண்டும் எனக்கோரி அப்போதைய தமிழ்நாட்டு ஆளுநரிடம் மனுவும் கையளித்தார். இது தமிழக மக்களிடையே எமது விடுதலைப் போராட்ட நியாயம் மேலும் வலுப்பெற திறவுகோலாக அமைந்தது.

தமிழகத்தில் முகாம்களில் ஏதிலிகளாக வசிக்கும் ஈழத் தமிழர்களை நேரில் சென்று பார்வையிட்டு உதவிகளையும் புரிந்தார். ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களுக்காக தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தையே தவிர்த்தார். பின் நாட்களில் அவரின் பிறந்தநாள் “வறுமை ஒழிப்பு தினமாக “அறிவிக்கப்பட்டு ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கு ஆவன செய்தார்.

ஈழத் தமிழர்களின் மீதான பற்றைப்போலவே, தமிழீழ போராட்டத்தை நடாத்திய எமது தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் மீதும் அளவு கடந்த அன்பையும் மதிப்பினையும் கொண்டிருந்தார். அதன் வெளிப்பாடாக தனது மூத்த மகனுக்கு "விஜயபிரபாகரன்" என்று பெயர் வைத்து, எமது தலைமை மீதும் ஈழத்தின் மீதும் தனக்கிருந்த பற்றைப் பறைசாற்றியிருந்தார். அதுமட்டும் இன்றி தனது நூறாவது படத்திற்கு "கப்டன் பிரபாகரன்" என பெயர் சூட்டினார். இப்பெயர் தான் அவரின் அடைமொழியாக நின்று, இன்று வரை அனைவராலும் அன்போடு "கப்டன்" என்று அழைக்கப்படுகின்றார். 2009 ஆம் ஆண்டில் ஈழத்தில் நடந்த இனப்படுகொலையை நிறுத்த வேண்டும் எனக்கோரி அவர் நடத்திய போராட்டங்கள் பல. ஈழத்தமிழர்கள் மீது அத்தனை இரக்கமென்றால் தன்னோடு நிற்கும் தமிழ்நாட்டு தமிழர்கள் மீதான அவரின் பற்றுதலை அளவிட முடியாது.

நடிகராக, நடிகர் சங்கத் தலைவராக, அரசியல்கட்சித் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, நல்ல உள்ளத்திற்கு சொந்தக்கார ராக, திரையுலகிலும், பொதுவாழ்விலும், தனது கடும் உழைப்பால் வெற்றிகரமாக முதன்மை முத்திரை பதித்த சாதனையாளன் கேப்டன் விஜய்காந்த், இறுதி மூச்சு நிற்கும் வரை ஈழத்தமிழர்களை நேசித்த மாமனிதர்.

"உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றுமே அழித்து விடுவதில்லை. நமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடம் உண்டு." எனும் தேசிய தலைவரின் கூற்றுக்கு அமைய தமிழீழ மக்களின் நினைவுகளில் தேச உணர்வாளர் கப்டன் விஜயகாந்த் என்றென்றும் வாழ்வார்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தேசிய முற்போக்கு திராவிடக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள், திரை உலகத்தினர் மற்றும் தமிழக மக்கள் அனைவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினராகிய நாம் தமிழீழ மக்கள் சார்பில் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை அவர்களின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

வி.ஜெயாத்தன்

வி. ஜெயாத்தன்
30/12/23

……………………

பொறுப்பாளர்

அரசியல்துறை

தமிழீழ விடுதலைப் புலிகள்.

தொடர்புகளுக்கு :- தொ.எண் : 00447414466757. மின்னஞ்சல் : politicaltamileelam@gmail.com